E.P.No. 13/2021 நாள்: 02.02.2026

ம.சா.2 திரு. ராஜேந்திரன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எந்த வருடம் கடைசியாக அகரப்பேட்டையில் செங்கல்சூளை கால்வாய் நடத்தினேன் என்றால் 2019-ல் நடத்தினேன். நான் செங்கல்சூளை நடத்திய இடம் நேமம், கடுங்கால் பிரிவு அருகிலா என்றால் இல்லை. மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக என்ன வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த அசல் வழக்கின் விவரம் தெரியாமல்தான் இந்த மனுவில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்ததை வைத்து சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் சாட்சி சொல்ல வந்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் முன்பு தெரியும், தற்போது ஞாபகம் இல்லை.

2) வழக்கு சொத்து அமைந்துள்ள அகரப்பேட்டை கிராமம் திருக்காட்டுப்பள்ளி-கல்லணை மெயின்ரோட்டிற்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான். தாவா இடத்தில் மனுதாரர் டீக்கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி டீக்கடைக்கு கீழ்புறம் பொது சந்து உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 05.12.2019 அன்று காவல்நிலையம் சென்றபோது என்னுடன் யார்யார் வந்தார்கள் என்றால் நானும், மூர்த்தி என்பவரும் முதலில் சென்றோம், பிறகு எனக்கு வேண்டியப்பட்ட பாலா என்பவர் கோவிலடி கிராமத்திலிருந்து வந்தார். எங்களுடன் மூர்த்தியை தவிர அகரப்பேட்டையை சேர்ந்தவர்கள் வேறு எவரும் இல்லை என்றால் சரிதான்.

3) மனுதாரர்கள் பொது சந்தை ஆக்கிரமித்து வைத்திருந்ததை அப்புறப்படுத்த எதிர்மனுதாரர்கள் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து நிலஅளவை செய்ய முயற்சித்தபோது நாங்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மனுதாரர்களுக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் என்ன பிரச்சனை என்பது தெரியாமல் மனுதாரர் கேட்டுக்கொண்டதின் பேரில் காவல்நிலையம் சென்றதற்கு பிறகு என்ன நடந்தது என்று தெரியாமல் மனுதாரர்கள் அழைத்ததின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் மனு சொத்து மனுதாரர்கள் நீண்ட காலமாக குடியிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கு ஆவணம் எதாவது வைத்துள்ளார்களா என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம்.

மனுதாரர்கள் எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Rajendran

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.02 15:08:53 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU